




புதுகை வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351








ஞாயிறு ❖ மார்ச். 20, 2022 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 7 ❖ இதழ் 164 ❖ ரூ.5


## மாநிலத்தை மட்டுமல்ல, மண்ணையும் காக்கும் வேளாண் பட்ஜெட்டிற்கு முதல்வர் ஸ்டாலின்

# பாராட்டு

**வேளாண் பட்ஜெட் மூலமாக விளைச்சல் அதிகமாகி, மாநிலத்தின் உற்பத்தி அதிகம் ஆகவே போகிறது. பசுமை என்பது நிலத்தில் மட்டுமல்ல, உழவர்களின் மனத்திலும் விளையப் போகிறது.**

**சென்னை , மார். 20:**

**மாநிலத்தை மட்டுமல்ல, மண்ணையும் காக்கும் அறிக்கையாக அமைந்துள்ளது என்று வேளாண் பட்ஜெட் குறித்து தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு தெரிவித்துள்ளார்.**



சட்டமன்றத்தில் நேற்று தாக்கல் செய்யப்பட்ட தமிழக வேளாண் பட்ஜெட் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது-

உழவர் பெருமக்களின் உள்ளம் மகிழத்தக்க வகையில் வேளாண்மைக்கு என தனிநிதிநிலை அறிக்கையை தமிழ்நாடு அரசு கடந்த ஆண்டுமுதல் தாக்கல் செய்து வருகிறது. உழவர்கள் வாழ்வும், வேளாண்மைத் துறையும் செழிக்கவும், சீர்பெறவும் ஏற்றமிகு எத்தனையோ திட்டங்களைக் கடந்த ஆண்டு வெளியிட்ட நிதிநிலை அறிக்கையில் அறிவித்தோம். அதனைச் செயல்படுத்திக் காட்டினோம்.

அதன் அடையாளம்தான் தமிழ்நாட்டில் பாசனப் பரப்பு அதிகம் ஆகியுள்ளது. விளைச்சல் அதிகம் ஆகியுள்ளது. உழவர் பெருமக்கள் மகிழ்ச்சியை அடைந்தார்கள். அத்தகைய மகிழ்ச்சியின் தொடர்ச்சியாக இந்த ஆண்டுக்கான வேளாண் நிதிநிலை அறிக்கையை வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர், எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் இன்றைய நாள் சட்டமன்றப் பேரவையில் தாக்கல் செய்துள்ளார்கள்.

உழவே தலை என்ற உன்னத நோக்கம் கொண்டதாக இந்த நிதிநிலை அறிக்கையை உருவாக்கி வழங்கிய அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வத்துக்கு எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அறிக்கைத் திட்டமிடுதலில் துணைநின்ற துறையின் செயலாளர் சமயமூர்த்திக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். 'அனைத்துத் துறைகளும் சமமாக வளர வேண்டும்' என்பதை இந்த அரசின் இலக்காக நான் அடிக்கடி வலியுறுத்திச் சொல்லி வருகிறேன். என்றாலும், அனைத்துத் துறைகளையும் விட வேளாண்மைத் துறை என்பது அதிகமாக வளர்ந்தாக வேண்டும். ஏனென்றால், வேளாண்மை என்பது தொழில் மட்டுமல்ல; அது வாழ்க்கை, பண்பாடு தொடர்புடையது ஆகும். உயிர்காக்கும் துறையாகும். மக்களைக் காக்கும் மகத்தான துறையாகும். அதனால்தான் இதற்கென தனிநிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்வது என கழக ஆட்சி அமைந்ததும் முடிவெடுத்தோம். அதனை இரண்டாவது ஆண்டாக மிகச் சிறப்பாகச் செயல்படுத்திக் காட்டி இருக்கிறோம்.

காவிரி டெல்டா மாவட்டங்களில் 4,964 கி.மீட்டர் நீளமுள்ள கால்வாய்கள் தூர்வாரப்பட உள்ளது. உழவர்களுக்கு இலவச மின்சாரம் வழங்க 5,157 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் பண்ணைக் குட்டைகள், தடுப்பணைகள் கட்டப்பட இருக்கின்றன. உழவர்களுக்கு இடுபொருட்கள் எடுத்துச் செல்ல பஞ்சாயத்துகளுக்குப் பணம் தரப்பட்ட உள்ளது. வணிக வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் மற்றும் கிராம வங்கிகள் மூலம் தமிழ்நாட்டு உழவர்களுக்கு ரூ.1,83,425 கோடி வேளாண் கடன் வழங்கப்படுவதை இத்துறை கண்காணிக்க இருக்கிறது.

90 பக்க அறிக்கையில் அறிவிக்கப்பட்ட ஒவ்வொரு திட்டமும், இந்த மாநிலத்தில் வாழும் லட்சக்கணக்கான உழவர் பெருமக்களுக்கு ஏதாவது ஒரு வகையில் உதவி செய்வதாகவும், அவர்களது நிலத்தை முன்னேற்றுவதாகவும், வளத்தை அதிகப்படுத்துவதாகவும் அமையப் போகிறது. இதன்மூலமாக விளைச்சல் அதிகமாகி, மாநிலத்தின் உற்பத்தி அதிகம் ஆகவே போகிறது. பசுமை என்பது நிலத்தில் மட்டுமல்ல, உழவர்களின் மனத்திலும் விளையப் போகிறது.

வான்புகழ் கொண்ட வள்ளுவரின் கனவை நிறைவேற்றும் வகையிலும், வானத்தை நம்பி வாழும் உழவர் பெருமக்களின் எதிர்பார்ப்பைப் பூர்த்தி செய்யும் வகையிலும் இந்த நிதிநிலை அறிக்கை அமைந்துள்ளது. மாநிலத்தை மட்டுமல்ல, மண்ணையும் காக்கும் அறிக்கையாக அமைந்துள்ளது மண்ணையும் காப்போம். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நேற்று சென்னை, பெரியார் திடலில், திராவிடர் கழகத்தில் பொறுப்பேற்று 45வது ஆண்டு தொடங்குவதையொட்டி திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணியை சந்தித்து பொன்னாடை அணிவித்து வாழ்த்துக்களை தெரிவித்தார். அருகில் அமைச்சர்கள் துரைமுருகன், பொன்முடி, எம்.ஆர்.கே பன்னீர்செல்வம், பி.கே. சேகர்பாபு உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# தமிழ்நாட்டிலுள்ள நரிக்குறவர்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கக்கோரி பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கடிதம்

*சென்னை, மார். 20:*

தமிழ்நாட்டிலுள்ள நரிக்குறவர்களை பழங்குடியினர்பட்டியலில் சேர்க்கக்கோரி பிரதமர் மோடிக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது-

தமிழ்நாட்டில் நரிக்குறவன்,குருவிக்காரன் சமூகம் என்று அழைக்கப்படும்நாடோடி பழங்குடியினரை தமிழ் நாட்டின் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கும் நடவடிக்கைகளில் ஏற்பட்டுள்ள தாமதம் தொடர்பாக இந்திய பிரதமர் நரேந்திர மோடி கவனத்தை ஈர்த்து, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

இந்த கடிதத்தில், தமிழ்நாடு அரசின் பரிந்துரைகளின் அடிப்படையில், 'குருவிக்காரன் குழுவினருடன் இணைந்த நரிக்குறவன்' சமூகத்தினரை, தமிழ்நாட்டின் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கும் திட்டத்திற்கு இந்திய தலைமை பதிவாளர் ஒப்புக்கொண்டுள்ளதாக, மத்திய பழங்குடியினர் விவகாரங்கள் துறையின் இயக்குனர் அவர்கள் மத்திய அரசின் கடிதத்தின் எண் மூலம் (எண் 12016/ S/2011- C&LM - 1, நாள் 30-4-2013)தெரிவித்திருந்ததை இந்திய பிரதமர் கவனத்திற்கு கொண்டுவர விரும்புவதாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும் வல்லுநர் குழுக்களான லோகூர் குழு 1965-ம் ஆண்டிலும் நாடாளுமன்றகூட்டுக்குழு 1967-ம் ஆண்டிலும் இந்த சமூகத்தினரை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க பரிந்துரைத்தன என்றும், நரிக்குறவர்கள் மிகவும் பின் தங்கிய மற்றும் பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய சமூகங்களில் ஒன்று என்றும், பழங்குடியினர் பட்டியலில் அவர்களை சேர்ப்பதன் மூலம், அவர்கள் அனைத்து அரசமைப்பு ரீதியிலான பாதுகாப்பு மற்றும் நலத் திட்டங்களைப் பெறத் தகுதியுடையவர்கள் என்றும் தனது கடிதத்தில் முதலமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதுதொடர்பாக பல கோரிக்கைகள் அளிக்கப்பட்டிருந்தும், இந்த சமூகத்தை பழங்குடியினர்பட்டியலில் சேர்ப்பதுநீண்டகாலமாக நிலுவையில் உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.எனவே இந்த விவகாரத்தில் உடனடியாக தலையிட்டு நரிக்குறவன்,குருவிக்காரன் சமூகத்தினரை தமிழ்நாட்டிலுள்ள பழங்குடியினர்பட்டியலில் சேர்த்திட விரைந்து நடவடிக்கைமேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.


# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

**கண்ணீருடன் நான்!!**

கடவுளுக்கு கண் இல்லை
கருணையும் இல்லை
நல்லவர்களை எல்லாம் நீ அழைத்துக்கொண்டால்
நாங்கள் என்ன செய்வது?
உன்னை பார்க்காத நான்,
உன் உருவத்தில் என் ஆசானை பார்த்தேன்.
எறும்புக்கு கூட தீங்கு செய்யாதவரை,
இரக்கம் இல்லாமல் அழைத்து கொண்டாயே...
பத்திரிக்கை துறையில் பாசத்தோடு பழகும் மூத்தநிருபர், நீங்கள் இல்லாமல்
பத்திரிக்கை துறை மட்டும் அல்ல
உங்களால் வளர்க்கப்பட்ட நானும் பரிதவித்து நிற்கிறேன்......

உங்கள் நினைவுடன் வாழும்
உங்களின் முதன்மை சிஷ்யன்
**சு.காதர் உசேன்**
புதுகை வரலாறு நாளிதழ், சென்னை பதிப்பு தலைமை செய்தி ஆசிரியர்
பொன்டைம்ஸ் டிவி CEO
மாநில தலைவர்
தமிழ்நாடு & புதுச்சேரி மீடியா பிரஸ் ரிப்போர்ட்ஸ் சங்கம் சென்னை
உங்கள் சிஷ்யர்கள்
G.சதீஷ்குமார், M.பூபதி, G.ராஜேஷ் மற்றும் ஊழியர்கள், நிருபர்கள்

வரலாறு நாளிதழ் | PON TIMES pontimestv.in | ISR MEDIA ONE

நிருபர்கள், ஊழியர்கள், சென்னை, புதுக்கோட்டை
9952928971



தோற்றம் : 19.08.1958
மறைவு : 20.03.2020

மனித நேயர் **P.C.பச்சைக்கனி**
(Ex.மாலைமலர் நிருபர், சமூக சேவகர்)

உங்கள் நினைவுடன் வாழும்
மனைவி : **P.தங்கமலர் பச்சைக்கனி**
மற்றும் மகன், மகள்கள், மருமகன்கள், மருமகள்
பேரன், பேத்திகள், சென்னை.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்












| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,805 | Rs.5,204 |

## வரலாற்றில் இன்று



1877 முதலாவது தேர்வுத் துடுப்பாட்டம் இங்கிலாந்துக்கும் ஆத்திரேலியாவுக்கும் இடையில் மெல்பேர்ண் துடுப்பாட்ட அரங்கில் ஆரம்பமானது.

1888 ஆங்கிலோ-திபெத்தியப் போர் ஆரம்பமானது.

1917 உருசியப் பேரரசர் இரண்டாம் நிக்கலாசு முடி துறந்தார். 304-ஆண்டுகால ரொமானொவ் வம்ச ஆட்சி முடிவுக்கு வந்தது.

1921 உதுமானியப் பேரரசின் முன்னாள் பிரதமரும், ஆர்மீனிய இனப்படுகொலையின் சூத்திரதாரியுமான தலாத் பாசா பெர்லினில் ஆர்மீனியர் ஒருவரால் படுகொலை செய்யப்பட்டார்.

1922 எகிப்து ஐக்கிய இராச்சியத்திடம் இருந்து முறையாக விடுதலை அடைந்த பின்னர் முதலாம் புவாட் எகிப்தின் மன்னனானார்.

1931 வைக்கிங்கு என்ற கப்பல் நியூபவுன்லாந்து அருகே வெடித்ததில் 27 பேர் உயிரிழந்தனர்.

1943 இரண்டாம் உலகப் போர்: நாட்சி செருமனியப் படையினர் உக்ரேனின் கார்க்கொவ் நகரை சோவியத் இராணுவத்திடம் இருந்து கைப்பற்றினர்.

1951 ஈரானில் எண்ணெய் உற்பத்தி தேசியமயமாக்கப்பட்டது.

1952 ரீயூனியன், சிலாவோசு நகரில் 24 மணி நேரத்தில் 1870 மிமீ மழைவீழ்ச்சி பதியப்பட்டது. இது உலக சாதனையாக அறிவிக்கப்பட்டது.

1961 தென்னாப்பிரிக்கா பொதுநலவாய நாடுகளில் இருந்து வெளியேறியது.

1970 எக்ஸ்போ '70 உலகக் கண்காட்சி சப்பானின் ஒசாக்கா நகரில் ஆரம்பமானது.

1978 சோமாலியா, எத்தியோப்பியா விற்கிடையேயான போர் முடிவுக்கு வந்தது.

1985 உலகின் முதலாவது இணைய ஆள்களப் பெயர் (SYMBOLICS.COM) பதியப்பட்டது.

1986 சிங்கப்பூரில் நியூ வேர்ல்ட் என்ற உணவு விடுதி இடிந்து வீழ்ந்ததில் 33 பேர் உயிரிழந்தனர்.

1990 மிக்கைல் கொர்பச்சோவ் சோவியத் ஒன்றியத்தின் முதலாவது நிறைவேற்று அரசுத்தலைவராகத் தெரிவானார்.

1991 பனிப்போர்: இரண்டாம் உலகப் போரின் பின்னர் செருமனியின் ஆதிக்க நாடுகளான ஐக்கிய இராச்சியம், பிரான்சு, ஐக்கிய அமெரிக்கா, சோவியத் ஒன்றியம் ஆகியவற்றிடம் இருந்து செருமனி முழுமையான விடுதலையைப் பெற்றது.

# வரதராஜப் பெருமாள் கோவிலில் உழவாரப்பணி துவக்கம்



**புதுக்கோட்டை** மார்.20-

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள வரதராஜப் பெருமாள் கோவிலில் 3 ஆம் ஆண்டு உழவாரப்பணி துவங்கப்பட்டது.

புதுக்கோட்டை அரசினர் தொழிற்பயிற்சி நிலையத்தின் நாட்டு நலப்பணித் திட்டம், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் சமூக நலப் பேரவை இணைந்து கீழ 3-ம் வீதியில் உள்ள வரதராஜப் பெருமாள் கோவிலில் 3 ஆம் ஆண்டு உழவாரப்பணி அரசினர் தொழிற்பயிற்சி நிலைய மேலாண்மைக் குழு உறுப்பினர் மாருதி கண.மோகன்ராஜா தலைமையில்நடைபெற்றது. முன்னதாக வருகை தந்த அனைவரையும் நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் P.ஜோதிமணி வரவேற்றார்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை சிவாஜி சமூக நலப் பேரவை தலைவர் A.சுப்பையா செய்திருந்தார். இந்நிகழ்ச்சியில் வழக்கறிஞர் A.சந்திரசேகர், நகரச் செயலாளர் க.நைனா முகமது, சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு சங்க துணை தலைவர் AMS.இப்ராஹீம் பாபு, சிறப்பு விருந்தினர்களாக கலந்துகொண்டுதூய்மைப் பணியினை துவக்கி வைத்தனர். மேலும் நிகழ்ச்சியில் கணேசன், தட்டாம்பட்டி ஆறுமுகம், பீர் முகமது, நிலைய உதவி அலுவலர் G.விஜயகுமார், தட்டச்சர் கமலாதேவி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.நிகழ்ச்சியின் நிறைவாக கோவில் குருக்கள் பாலாஜி நன்றி கூறினார்.

# தா. பழூரில் மாற்றுத்திறனாளி மாணவ மாணவியர்களுக்கான மருத்துவ முகாம்



அரியலூர் மார்.20-

தா. பழூரில் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியருக்கான மருத்துவ முகாம் நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட, சமக்ர சிக்க்ஷா எனப்படும், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி மற்றும் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில், மாற்றுத்திறனுடைய மாணவ,மாணவியருக்கான, தேசிய அடையாள அட்டை மற்றும்உதவிஉபகரணங்கள் தேவைப்படுவோரை கண்டறியும், இலவச மருத்துவ முகாம், தா.பழூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது.

இதன் துவக்க விழா நிகழ்ச்சிக்கு,மாவட்ட கல்வி அலுவலர் ஜோதிமணி தலைமை வைத்தார். திட்ட ஒருங்கிணைப்பாளர் பன்னீர்செல்வம், அரியலூர் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சீனிவாசன், உள்ளிட்டோர் முன்னிலை வகித்தனர். தா.பழூர் வட்டார வள மைய சூப்ரவைசர் இளவழகன் வரவேற்றுப் பேசினார். மருத்துவ வல்லுநர்கள், டாக்டர்கள் கலைமதி, செந்தில் குமார், ரத்னா, விக்ரம், கவிதா, மற்றும் அவர்களின் மருத்துவ குழுவினர், மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கு மருத்துவ பரிசோதனை நடத்தினர்.

முகாமில் 128 பேர்,உதவி உபகரணங்கள் பெறுவதற்காகவும், 4பேர் காதொலி கருவிகள் பெறுவதற்காகவும், சிறப்பு நாற்காலி பெற ஒருவர், மூன்று சக்கர நாற்காலி பெறஒருவர்,தொலைபேசி பெற ஒருவர் என்பது உட்பட,பல்வேறுதுறைகள் சார்பில் பலர் தேர்வு செய்யப்பட்டனர்.

தேசிய அடையாள அட்டை, ஆதார் அட்டை உள்ளிட்டவை பெறுவதற்காக, 72 பேர் தேர்வு செய்யப்பட்டனர்.

மேலும்முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்ட ஆதார் அட்டை, மாற்றுத்திறனாளிகளுக்கான தனித்துவம் வாய்ந்த அடையாள அட்டை, வருமானச் சான்று உள்ளிட்டவைகளும் வழங்கப்பட்டன.

இம்முகாமில்,தா பழூர் அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியை காந்திமதி, வட்டார கல்வி அலுவலர் அசோகன், சாந்திராணி, சகாயம் ஆசிரியை, மற்றும் சிறப்பு ஆசிரியர்கள், ஆசிரிய பயிற்றுனர்கள், துறை சார்ந்த வல்லுநர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

# புதுக்கோட்டை அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி கோவிலில் சிறப்பு வழிபாடு



**புதுக்கோட்டை மார்.20-**

புதுக்கோட்டை மேலராஜ வீதியில் உள்ள அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி கோவிலில் பங்குனி உத்திரத்தை முன்னிட்டு சிறப்பு வழிபாடு நடைபெற்றது.

புதுக்கோட்டை மாவட்டம் மேலராஜ வீதியில் உள்ள அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி கோவிலில் பங்குனி உத்திரத்தை முன்னிட்டு அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமிக்கு,பாலபிஷேகம், பன்னீர், தயிர், பஞ்சாமிர்தம், இளநீர் சந்தனம், மஞ்சள், நீர், திருநீர் உள்ளிட்ட பூஜை பொருள்களில் சிறப்பு அபிஷேகம் மற்றும் தீபாராதனை நடைபெற்றது. தண்டாயுதபாணி சுவாமி மலர் அலங்காரத்திலும், ஆலயத்திலுள்ள விநாயகர் வெள்ளிக் கவச அலங்காரத்திலும் உற்சவர் மலர் அலங்காரத்திலும் அருள் பாளித்தனர். இதில், அந்தப் பகுதியிலுள்ள பக்தர்கள் கலந்துகொண்டு வழிபட்டனர். அனைவருக்கும் பிரசாதங்கள் வழங்கப்பட்டது. விழா ஏற்பாடுகளை பாலு அய்யர் மற்றும் கோயில் ஊழியர்கள் சிறப்புடன் செய்திருந்தனர்.








▶ புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், ஆரியூர் கிராமத்தில் செய்தி மக்கள் தொடர்பு துறையின் சார்பில் தமிழ்நாடு முதலமைச்சரின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் குறித்த புகைப்படக் கண்காட்சி நேற்று நடைபெற்றது. இதனை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.



▶ திருச்சிராப்பள்ளி மாவட்ட நிர்வாகம், மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தின் சார்பில் நேற்று திருவானைக்காவல் ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற மாபெரும் தனியார் துறை வேலைவாய்ப்பு முகாமில் தேர்வு செய்யப்பட்ட வேலை நாடுநர்களுக்கு பணி நியமன ஆணைகளை மாவட்ட ஆட்சித்தலைவர் சிவராசு வழங்கினார். அருகில் மாநகராட்சி துணை மேயர் திவ்யா, வேலைவாய்ப்புத் துறை மண்டல இணை இயக்குனர் தேவேந்திரன், துணை இயக்குனர் மகாராணி, கல்லூரியின் செயலாளர் அம்மங்கி, பாலாஜி, முதல்வர் பிச்சைமணி ஆகியோர் உள்ளனர்.

# ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.216 குறைந்தது



சென்னை மார்.20-

சென்னையில் 22கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.216 குறைந்துள்ளது. சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை கிடுகிடுவென உயர்ந்து வரும் நிலையில், தங்கம் விலையும்போட்டிபோட்டு அதிகரித்து வருகிறது. இந்தியாவில், பண்டிகை காலம்என்றால்,தங்கத்தின் விற்பனை பன்மடங்கு அதிகரிக்கும்.இதனிடையே ரஷ்யா - உக்ரைன் போர் எதிரொலியாக கடந்த சில நாட்களாகவே தங்கம் விலை ஏற்ற,இறக்கத்துடன் கண்ணாமூச்சி ஆடி வருகிறது. முன்னதாக சவரன் 40 ஆயிரத்தை எட்டி இல்லத்தரசிகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

தங்கம் விலையானது வாரத்தின் முதல் நாளான திங்கள் முதல் விலை அதிரடி உயர்ந்த நிலையில் மீண்டும் குறைந்து உள்ளது. அதன்படி, சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.216 குறைந்து , ரூ.38,440-க்கு விற்பனை செய்யப்படுகிறது. சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.27 குறைந்து, ரூ.4,805 க்கு விற்பனையாகிறது. சென்னையில்வெள்ளியின் விலை ஒரு கிராமுக்கு 60 காசு குறைந்து, ரூ.72.30 க்கு விற்பனைசெய்யப்படுகிறது. இன்னும் ஒரு சில நாட்களுக்கு தங்கத்தின் விலைஏற்றஇறக்கத்துடன் தான் இருக்கும் என்று நகை வியாபாரிகள் தெரிவித்துள்ளனர்.

# தமிழகத்தில் உள்ள குறவர் இன சமூகத்தினரை பழங்குடியினர் பட்டியலில் சேர்க்க நடவடிக்கை

## பிரதமர் மோடிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்

சென்னை, மார்.20-

தமிழ்நாட்டில் உள்ள குறவர் இன சமூகத்தினரை பழங்குடியினர்பட்டியலில் சேர்க்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதமர் நரேந்திர மோடிக்குதமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.

தமிழ்நாட்டில் நரிக்குறவன் / குருவிக்காரன் சமூகம் என்று அழைக்கப்படும் நாடோடிபழங்குடியினரை தமிழ்நாட்டின் பழங்குடியினர்பட்டியலில் சேர்க்கும்நடவடிக்கையில் ஏற்பட்டுள்ள தாமதம் தொடர்பாக, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி கவனத்தை ஈர்த்து, தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று எழுதியுள்ள கடிதத்தில், தமிழ்நாடு அரசின் பரிந்துரைகளின் அடிப்படையில், 'குருவிக்காரன் குழுவினருடன் இணைந்த நரிக்குறவன்' சமூகத்தினரை, தமிழ்நாட்டின் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கும் திட்டத்திற்கு இந்திய தலைமைப் பதிவாளர் ஒப்புக்கொண்டுள்ளதாக, ஒன்றியப் பழங்குடியினர் விவகாரங்கள் துறையின் இயக்குநர் அவர்கள் மத்திய அரசின் கடிதத்தின் மூலம் (எண் 12016/S/2011-C&LM-1, நாள் 30-4-2013) தெரிவித்திருந்ததை, இந்தியப் பிரதமர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரவிரும்புவதாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும், வல்லுநர் குழுக்களான லோகூர் குழு 1965 -ம் ஆண்டிலும், நாடாளுமன்றக் கூட்டுக் குழு 1967-ம் ஆண்டிலும், இந்த சமூகத்தினரை பழங்குடியினர்பட்டியலில் சேர்க்க பரிந்துரைத்தன என்றும், நரிக்குறவர்கள் மிகவும் பின்தங்கிய மற்றும் பாதிக்கப் பட்டிருக்கக்கூடிய சமூகங்களில் ஒன்று என்றும், பழங்குடியினர் பட்டியலில் அவர்களைச் சேர்ப்பதன் மூலம், அவர்கள் அனைத்து அரசமைப்பு ரீதியிலான பாதுகாப்பு மற்றும் நலத் திட்டங்களைப் பெறத் தகுதியுடையவர்களாவார்கள் என்றும் தனது கடிதத்தில் முதலமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக பல கோரிக்கைகள் அளிக்கப்பட்டிருந்தும், இந்த சமூகத்தை பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பது நீண்ட காலமாக நிலுவையில் உள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். எனவே,இந்தவிவகாரத்தில் உடனடியாகத் தலையிட்டு, நரிக்குறவன், குருவிக்காரன் சமூகத்தினரை தமிழ்நாட்டிலுள்ள பழங்குடியினர்பட்டியலில் சேர்த்திட விரைந்து நடவடிக்கைமேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

# உசிலம்பட்டி மாப்பிள்ளைக்கு இங்கிலாந்து பொண்ணு மதுரையில் நடந்த மாஸ் ரிசப்ஷன்



மதுரை, மார்.20-

உசிலம்பட்டியைச் சேர்ந்த இளைஞரை திருமணம் செய்த இங்கிலாந்து சாரா எலிசபெத் என்ற இளம் பெண் - வரவேற்பு நிகழ்வில் மரக்கன்றுகளை வழங்கி சுற்றுச் சூழலை பாதுகாக்க மணமக்கள் கோரிக்கை விடுத்துள்ளார்.

மதுரை மாவட்டம் உசிலம்பட்டியை சேர்ந்த சாம் டேவிட் லிவிங்ஸ்டன் என்பவர் இங்கிலாந்தில் பிசியோதரபிஸ்ட் ஆக பணியாற்றி வருகிறார். இந்நிலையில் இங்கிலாந்து பிரஸ்டன் பகுதியைச் சேர்ந்த சாரா எலிசபெத் என்ற ஆக்குபேஸன்ட் தெரபிஸ்ட் -யை கடந்த ஆண்டு மே 21 ஆம் தேதி திருமணம் செய்து கொண்ட நிலையில் கொரோனா பரவல் காரணமாக சொந்த ஊருக்கு வர முடியாத சூழல் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

தற்போது நாடு திரும்பியுள்ள இந்த இளம் ஜோடிக்கு உசிலம்பட்டியில் உள்ள ஏஜி சர்ச் -ல் திருமண வரவேற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த விழாவிற்கு வந்திருந்த அனைவருக்கும் மரக்கன்றுகளை வழங்கி மணமக்கள் இயற்கையை பாதுகாக்க மரக்கன்றுகளை நட வலியுறுத்தினர்.

தொடர்ந்து கணவனின் உறவினர்கள் மற்றும் இங்கு உள்ள மக்கள் அன்பு செலுத்துவது மிகவும் பிடித்துபோனதாகவும், கிராமப்புற பகுதி மிகவும் அழகானதாக உள்ளதாகவும், இங்குள்ள கலாச்சாரம், உடைகள் மற்றும் உணவு முறைகளான அரிசி சாதம், சப்பாத்தி, சிக்கன் பிரியாணி என இந்திய உணவு வகைகள் அனைத்தும் அருமை என சாரா எலிசபெத் பேட்டியளித்தார்.



▶ அதிமுக திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளரும் முன்னாள் அமைச்சருமான மாதவரம் வி. மூர்த்தி உத்தரவின் படி அதிமுக திருவள்ளூர் கிழக்கு மாவட்ட வழக்கறிஞர் பிரிவு இணைச் செயலாளரும் முன்னாள் தமிழக அரசு சென்னை உயர்நீதிமன்றம் கூடுதல் வழக்கறிஞர் எம்.தமிழரசன் தலைமையில் முன்னாள் அமைச்சரும் முன்னாள் ராயபுரம் சட்டமன்ற உறுப்பினருமான ஜெயக்குமாருக்கு மாலை அணிவித்து சால்வை அணிவித்து பூங்கொத்து கொடுத்து மரியாதை நிமித்தமாக சந்தித்தபோது எடுத்த புகைப்படம். இதில் அதிமுக திருவள்ளூர் கிழக்கு மாவட்ட கட்சி நிர்வாகிகள் பலர் உடனிருந்தனர்

திருக்கடையூர் கும்பாபிஷேகத்தை முன்னிட்டு

# தருமபுரம் 27-வது மடாதிபதி பாதயாத்திரை ஆக்கூரில் மும்மதத்தினர் வரவேற்பு





திருக்கடையூர், மார்ச்-20;

திருக்கடையூருக்கு பாதயாத்திரை செல்லும் தருமபுர ஆதீன மடாதிபதிக்கு சமய நல்லிணக்கத்தை வலியுறுத்தும் வகையில் ஆக்கூர் பள்ளிவாசல் சார்பில் இஸ்லாமியர்கள், துவாசெய்துவரவேற்றனர், கிறிஸ்தவ பாதிரிமார்கள் பங்கேற்பு:-

மயிலாடுதுறை மாவட்டம் திருக்கடையூரில் அமைந்துள்ள புகழ்பெற்ற அபிராமி அம்மன் சமேத அமிர்த கடேஸ்வரர் ஆலய கும்பாபிஷேகம் 27-ஆம் தேதி நடைபெறுகிறது. இதனை முன்னிட்டு தருமபுர ஆதீன 27-வது மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், வெள்ளிக்கிழமை ஆதீன மடத்தில் இருந்து ஆதீன பூஜா மூர்த்தியாகிய சொக்கநாதப் பெருமான் உடன் குரு லிங்க சங்கம பாதயாத்திரையை துவக்கினார்.

இரண்டாம் நாளாக நேற்று பாதயாத்திரை காலஹஸ்தினாபுரத்தில் இருந்து துவங்கியது. ஆக்கூர் ஊராட்சியை நோக்கி பாதயாத்திரை சென்ற பொழுது ஊராட்சி மன்ற தலைவர் சந்திரமோகன் தலைமையில் சமய நல்லிணக்கத்தை வலியுறுத்தும் வகையில் ஆக்கூர் பள்ளிவாசல் சார்பில் ஜமாத்தார்கள் தருமபுர ஆதீன மடாதிபதிக்கு மரியாதை செய்து வரவேற்றனர். ஜமாத்தார்களுக்கு ஆதீனம்சார்பில்சால்வை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

தொடர்ந்து இஸ்லாமியர்கள் சிறப்பு துஆ செய்தனர். இதனையடுத்து ஆக்கூர் டி.இ.எல்.சி. திருச்சபையைச் சார்ந்த பாதிரியார்கள் வரவேற்பு அளித்தனர். பாதயாத்திரையில் வந்தவர்களுக்கு இஸ்லாமியர்கள் குடிநீர் வழங்கினர்.

# திருத்தணி அரசினர் மகளிர் மேல்நிலைப் பள்ளியில் மாணவிகளுக்கு கொரோனா தடுப்பூசி முகாம்



திருத்தணி மார்ச்.20.

மாணவிகளுக்கு தடுப்பூசி முகாம் 12 வயது முதல் 14 வயது உட்பட்ட பள்ளி மாணவர்களுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகின்றது. இத் திட்டத்தின்கீழ் திருத்தணி அரசு மகளிர் மேல் நிலை ப்பள்ளியில் படித்து வரும்12 மற்றும் 14 வகுப்பு மாணவிகளுக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தும்பணியை நகரமன்ற தலைவர் சரஸ்வதி பூபதி நேற்று தொடங்கி தொடங்கிவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் திருவள்ளூர் திமுகமேற்கு மாவட்ட பொறுப்பாளர் எம். பூபதி திருத்தணி நகர பொறுப்பாளர் வி.வினோத் குமார் நகராட்சிதுணைத்தலைவர் ஆ. சாமி ராஜ் கவுன்சிலர்கள் தீபா ரஞ்சனி சண்முகவள்ளி ஷியாம் சுந்தர் பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் குமரவேல் பள்ளி தலைமையாசிரியர் அம்பிகை ஷீலா ஜான்சிராணி உதவி தலைமையாசிரியர் சேஷாசலம் மற்றும் ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்

# வடசென்னை திருநங்கைகளுக்கான திருநங்கைள் நல திட்டம் துவக்கம்



சென்னை , மார். 20:

வடசென்னையில் திருநங்கைகள் நலனுக்காக உருவான சிநேகிதி அமைப்பு ஆகும். இந்த அமைப்புவடசென்னையில் இருக்கும்திருநங்கைகளுக்கு பல்வேறுநலத்திட்டங்களை செய்து வருகிறது.

இந்நிலையில் திருநங்கைகளின்அடிப்படை தேவையான திருநங்கை அடையாள அட்டை, ஆதார் அட்டை, ரேசன் அட்டைமற்றும்நலவாரிய உறுப்பினர் அடையாள அட்டை பெற்று தருவது மற்றும் அரசின் சலுகைகளை பெறுவதில் பல்வேறு சிக்கல்களை சந்தித்து வருகின்றனர்.

இதனை நிவர்த்தி செய்யும்விதமாகஓய்எம்சிஏ மெட்ராஸ்மற்றும்சிநேகிதி அமைப்பின் சார்பில் வடசென்னையில் இருக்கும்திருநங்கைகளின் அடிப்படை பிரச்சனைகளை நிவர்த்தி செய்யும் வகையில் திருநங்கைகள் நலதிட்டம் துவங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் அரசு ஆவணங்கள் பெறுவது,திருநங்கைகளின் அடிப்படை தேவையை பூர்த்தி செய்யும் வகையில் இந்த திட்டத்தில் பணியாற்றுபவர்கள் திருநங்கைகளுக்காக பணியாற்றுவார்கள். இதற்காக சிநேகிதி அமைப்பில் இருந்து திட்ட இயக்குநராக திருநங்கை தனபாக்கியம், களபணியாளர்களாக ரூபகலா மற்றும் தன்ஷிகா ஆகியோர்இந்ததிட்டத்தில் பணியாற்ற உள்ளனர்.

இந்த திட்டத்தை சமூக நலத்துறை இணை செயலாளர் உமாதேவி, ஒய்எம்சிஏ துணை தலைவர் ரவிக்குமார் டேவிட்,இணை இயக்குநர் டாக்டர் ஜானகிராமன், வழக்கறிஞர் ஆதிலட்சுமி லோகநாதன், தாய் அமைப்பின் சார்பில் திருநங்கை கலைமாமணி சுதா, சகோதரன் திட்ட இயக்குநர் திருநங்கை ஜெயா ஆகியோர் துவக்கி வைத்தனர்.

இதுகுறித்து சமூக நலத்துறை இணை செயலாளர் உமாதேவி செய்தியாளர்களிடம் கூறியதாவது,

சமூக நல துறை சார்பில்திருநங்கைகளுக்கு நலவாரிய அடையாள அட்டை தருவது, சுயதொழிலுக்கு நிதி ஒதுக்கி தருவது போன்ற அனைத்து தேவைகளும் திருநங்கைகளுக்கு செயல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் இதில் பயன்பெறாத மற்ற திருநங்கைகளும் பயன்பெறுவதற்கான நடவடிக்கைகள் செய்யப்பட்டுவருகின்றன என அவர் தெரிவித்தார்.

மேலும் இதுகுறித்து ஒய்எம்சிஏவின் பொதுசெயலாளர் ஆசிர் பாண்டியன் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

நாங்கள் ஒய்எம்சிஏ நிறுவனம்மூலமாகபல்வேறு நலத்திட்ட உதவிகளை செய்து வருகிறோம். குறிப்பாகதிருநங்கைகளுக்கு பல்வேறு உதவிகளை செய்து வருகிறோம். மேலும் வடசென்னையில் உள்ள திருநங்கைகளுக்கு அரசின் சலுகைகளை பெற்று தருவதற்காக திருநங்கைகளுக்காக நல திட்டத்தை துவக்கி திருநங்கைகளுடன் இணைந்து பணியாற்ற உள்ளோம் என அவர் தெரிவித்தார்.

மேலும்இந்ததிட்டத்தின் திட்ட இயக்குநராக பணியாற்ற உள்ள திருநங்கை தனபாக்கியம் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

எங்களின் சிநேகிதி அமைப்பிற்கு இன்று பொன்னான நாளாகும். திருநங்கைகளுக்கு பயனளிக்கும் வகையில் எங்களுக்கு இந்த திட்டம் கிடைத்துள்ளது. வடசென்னையில் உள்ள திருநங்கைகளுக்கு ஒளிமயமான எதிர்காலம் அமைவதற்கு இந்த திட்டம் உறுதுணையாக இருக்கும். இந்த திட்டத்தை ஏற்படுத்தி தந்த ஒய்எம்சிஏ மற்றும் அரசுக்கு நன்றிகளை தெரிவித்துகொள்கிறோம் என அவர் தெரிவித்தார்.

அமிர்தம் ஸ்டோர்ஸ் A/C
♦ பாத்திரங்கள் ♦ பர்னிச்சர்ஸ் ♦ எலக்ட்ரானிக்ஸ்
♦ பிளாஸ்டிக்ஸ் ♦ பேக்ஸ்
கீழ 2ம் வீதி, புதுக்கோட்டை. போன் : 04322 290395
www.amirthamstores.co.in amirthammetals@gmail.com



▶ திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 29-வது தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாட்டில் மாநில அளவில் பங்குபெற்ற திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த 48 இளம் விஞ்ஞானிகளுக்கு மாவட்ட ஆட்சியர் ஆல்பி ஜான் வர்கீஸ் சான்றிதழ்கள் மற்றும் கேடயங்கள் வழங்கி பாராட்டினார். உடன் மாவட்ட சார் ஆட்சியர் (பயிற்சி ) மகாபாரதி, முதன்மை கல்வி அலுவலர் ஆறுமுகம்,தேசிய குழந்தைகள் அறிவியல் மாநாட்டின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் ராஜேந்திரன் உள்ளனர்.

# மக்கும் குப்பை மக்காத குப்பைகளை சேகரிப்பதற்காக பாக்கெட்டுகள் வழங்கும் விழா



திருவள்ளூர், மார். 20:

திருவள்ளூர் அடுத்த பூண்டி ஒன்றியம் சிறுவானூர் கிராமத்தில் திடக்கழிவு மேலாண்மை திட்டம் திறம்பட செயல்படுத்திட ஊராட்சியில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் சமுதாயஅக்கறைகொண்ட நண்பர்கள் மூலமாக பெற்ற மக்கும் குப்பை மக்காத குப்பைகளை சேகரிப்பதற்காக பாக்கெட்டுகள் வழங்கும் விழா நேற்று ஊராட்சி மன்றஅலுவலகம் அருகே நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு ஊராட்சி மன்ற தலைவர் பவானி ரமேஷ்குமார் தலைமை தாங்க, ஊராட்சிதுணைத் தலைவர்இந்திராகோபிநாத் முன்னிலை வகித்தார். முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சி.பி. ரமேஷ்குமார்வரவேற்புரை நிகழ்த்தினார்.

விழாவிற்கு சிறப்பு அழைப்பாளர்களாக வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கலைச்செல்வி, சித்ரா பெர்ணான்டஸ், மத்திய சுற்றுச்சூழல் துறை இணை இயக்குநர்.எஸ். பிரபாகரன் மற்றும் சென்னையை சேர்ந்த பிரபல தொழிலதிபர் அயோத்திராமன் ஆகியோர்கலந்துகொண்டு மக்கும் குப்பை மக்காத குப்பை சேகரிப்பதற்காக சிறுவானூர் ஊராட்சிக்கு உட்பட்ட 650 குடும்பங்களுக்கு, ஒரு குடும்பத்திற்கு இரண்டு பக்கட்வீதம்1,500பக்கட்டிகள் மற்றும் குப்பை ஏற்றி செல்லும் சைக்கிள்களும் வழங்கினார்கள். மேலும் இந்நிகழ்ச்சியில் திட்டம் குறித்து பொதுமக்களுக்கு மண்டல பி.டி.ஓ க்கள் ரீட்டா மேரி,நாகப்பன் , ஒன்றிய பொறியாளர்கள் லட்சுமி, சந்திரசேகர் ஆகியோர் விளக்கினார்கள்.

நிகழ்ச்சியில் மாவட்ட குழு உறுப்பினர் யு .சிவசங்கரி உதயகுமார், ஒன்றிய குழு உறுப்பினர் ரெஜிலா ஜெயச்சந்திரன் மற்றும் வார்டு உறுப்பினர்கள் சுரேஷ், சந்தோஷ் குமார், கவிதா ஈஸ்வரன், அஞ்சலா மதன் குமார், கவிதா ராஜேஷ், சாருமதி முருகன், சதீஷ், வளர்மதி ஜான் மற்றும் கிராம பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர் . முடிவில் ஊராட்சி செயலர் திருவேங்கடம் நன்றியுரை வழங்கினார்



▶ பாண்டிச்சேரி அரசு காரைக்கால் மாவட்டத்தில் சமூக நலத்துறை மூலம் மாற்றுத் திறனாளிகளுக்கான மாதாந்திற நிதி உதவி வழங்கும் திட்டத்தின் கீழ் நெடுங்காடு தொகுதியைச் சேர்ந்த 30 பயனாளிகளுக்கு போக்குவரத்து துறை அமைச்சர் சந்திர பிரியங்கா அடையாள அட்டையை பயனாளிகளுக்கு வழங்கினார். இந்நிகழ்வில் சமூகநலத் துறை உதவி இயக்குநர் சத்யா மற்றும் அலுவலக ஊழியர்கள் உடன் இருந்தனர். வருகின்ற ஏப்ரல் மாதம் முதல் அவரவர் வங்கிக் கணக்கில் பணம் செலுத்தப்படும் என்றும் இவர்களின் மொத்த தொகை 79.000 ஆயிரம் ஆகும் என்றும் சமூக நலத்துறை உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.






▶ தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவர் குமரி ஆனந்தன் தனது 90வது பிறந்தநாளையொட்டி சந்தித்த போது முத்தமிழறிஞர் கலைஞரின் சிலையை முதலமைச்சர் பரிசாக வழங்கினார்.

# மங்களம் ஊராட்சியில் மகளிர் சுய உதவி குழு பெண்களுக்கு போட்டி: வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு



ஊத்துக்கோட்டை, மார்20-

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், மங்களம் ஊராட்சிமற்றும்தாமரைப் பாக்கம்கூட்டுச்சாலையில் உள்ள சின்மயா கிராம மேம்பாட்டு அமைப்பு இணைந்து உலக மகளிர் தினத்தைமுன்னிட்டுநேற்று மங்களம் கிராமத்தில் மகளிர் சக்தி என்ற தலைப்பில் மகளிர் மேம்பாட்டு விழாவை கொண்டாடினர்.

இதில், 150-க்கும் மேற்பட்ட மகளிர்களுக்கு பல்வேறு போட்டிகளை நடத்தி பரிசு வழங்கினர். இதில், பெண் உரிமை,சுகாதாரம்,பாலம் கட்டுவது என்ற தலைப்புகளில் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. மேலும், கயிறு இழுத்தல், தண்ணீர் நிரப்புதல், ஓட்டப்பந்தயம், ஓவியப்போட்டி, கட்டுரைப் போட்டி உள்ளிட்ட பல்வேறு போட்டிகள் நடைபெற்றது. இதில், வெற்றி பெற்ற மகளிர் மற்றும் மகளிர் குழுக்களுக்கு பரிசு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நடைபெற்ற இந்நிகழ்ச்சியை மங்களம் ஊராட்சிமன்ற தலைவர் சுரேஷ் குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தார். துணைத் தலைவர் வினோத்குமார், கிராம நிர்வாக அதிகாரி பழனி கும்மிடிப்பூண்டி மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் இளங்கோவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.இதில்,சிறப்பு அழைப்பாளராக தாமரைப்பாக்கம் கூட்டு சாலையில்உள்ள சின்மயா கிராம மேம்பாட்டு அமைப்பின் இயக்குனர் ப்ரியா அருணாசலம் கலந்து கொண்டு பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளை வழங்கி பாராட்டி பேசினார். முடிவில்,6-வது வார்டு உறுப்பினர் ரேணுகா நன்றி கூறினார்.

# செங்குன்றத்தில் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா அம்பத்தூர் மண்டலம் அரசு மற்றும் வங்கி கடன் விழா



சென்னை , மார். 20:

செங்குன்றத்தில் ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா வங்கியின் சார்பில் மகளிருக்கான கடன் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது இதில் அம்பத்தூர் மண்டலம் அரசு மற்றும் வங்கி கடன் சென்னை செங்குன்றம் நெல் அரிசி மொத்த வியாபாரிகள்சங்கதிருமண மண்டபத்தில் ஸ்டேட் பேங்க் ஆப் வங்கியின் சென்னை நெட்வோர்க் ஒன் - பொது மேலாளர் வினோத் ஜெஸ்வால், தலைமையில்மிகசிறப்பாக நடைபெற்றது . இதில் திருவள்ளூர் மாவட்ட துணை ஆட்சியாளர் மகாபாரதி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார்

பாரத் ஸ்டேட் வங்கியின் அரசு மற்றும் கடன்திட்டங்களின்கீழ்150 பயனாளிகளுக்கு ரூபாய் 46.55 கோடியில் கடன் தொகை, காசோலைகள் வழங்கப்பட்டன.

இவ்விழாவில் வங்கியின் திருவள்ளூர் மாவட்ட ஊரக வளர்ச்சி திட்ட இயக்குனர் வை. ஜெயக்குமார், மாவட்ட தொழில்பயிற்சிஇயக்குனர் மணிவண்ணன், மகளிர் திட்ட உதவி அலுவலர் வீரமணி, தாட்கோ சுப்புலட்சுமி யம்மாள், எஸ்.பி.ஐ. சென்னை வடக்கு துணைப் பொது மேலாளர் .என்.டி.எஸ். வி நாகேஸ்வரராவ், சஃபல் திரிபாதி, மண்டல மேலாளர் ஹரிஹரன், வீ.எஸ். நிஷா மற்றும் செங்குன்றம் நெல் அரிசி வியாபாரி சங்க கௌரவ ஆலோசகர் சங்கத் தலைவர் டி. துளசிங்கம், துணைத்தலைவர் கோபி. துணைத் தலைவர் எம். ஜெயபாலன், செயலாளர் ஏ. லோகநாதன், இணைச் செயலாளர் நாகேந்திரன் மற்றும் பலர் எஸ்பிஐ வங்கியின் 10 க்கும் மேற்பட்ட கிளை மேலாளர்கள் கலந்து கொண்டனர்.



▶ சமீபத்தில் பாண்டிச்சேரி யில் நடந்த சிலம்ப போட்டியில் சி.பா. ஆதித்தனார் சிலம்ப கலைக்கூடம் சார்பில் கலந்து கொண்டு தங்கம். வெள்ளி பதக்கம் வென்ற மாணவ மாணவிகள் ஆசான்கள். முருககனி. ராஜாவுடன் தமிழ்நாடு பாண்டிச்சேரி பார் கவுன்சில் சேர்மன். பி. எஸ். அமல்ராஜை சந்தித்து வாழ்த்து பெற்றனர்.



▶ புதுக்கோட்டை மாவட்டம் திருவரங்குளம் அருகே உள்ள கத்தக்குறிச்சி நம்புகுளி கிராமத்தில் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சுப்பிரமணியன தனக்கு சொந்தமான பல ஏக்கர் நிலப்பரப்பில் பாரம்பரிய நெல் வகைகளான மாப்பிள்ளை சம்பா, தூயமல்லி, ஒட்டு கிச்சடி மிளகி சீரகச் சம்பா, தாய்லாந்து கிச்சடி, மைசூர் மல்லி, கருப்பு கவுனி உள்ளிட்ட 25க்கும் மேற்பட்ட வகையான ரகங்களை சாகுபடி செய்து வருகிறார் இவரது வயலில் இலுப்பூர் மதர்தெரசா வேளாண் கல்லூரி மாணவர்கள் பாரம்பரிய நெல் ரகங்கள் மற்றும் மூலிகை மரங்களின் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டனர்.

# புதுமையை வைத்து பழமையான கோயில்களைப் போல தற்போது உருவாக்க முடியாது

## சென்னை உயர்நீதிமன்றம் கருத்து



சென்னை மார்.20–

நவீன தொழில் நுட்பங்களை பயன்படுத்தினாலும் ஆயிரம் ஆண்டுகள் பழமையான கோயில்களைப் போல உருவாக்க முடியாது என சென்னை உயர்நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது.

உயர்நீதிமன்ற உத்தரவை மீறும் வகையில் சுசீந்திரம் தாணுமாலய சுவாமி கோவிலில் ஓவியங்கள் அழிக்கப்படுவதாகவும், நாமக்கல் சோளீஸ்வரர் கோவிலின் பழமையான கற்கள் உடைக்க படுவதாகவும், திருவெள்ளறை கோவில் சேதப்படுத்த படுவதாகவும் ரங்கராஜன் நரசிம்மன் நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்ந்துள்ளார். இந்த வழக்கு நீதிபதிகள் ஆர்.மகாதேவன், பி.டி. ஆதிகேசவலு அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிக்கப்பட்டு வருவதாக இந்து சமய அறநிலையத்துறைசார்பில் தெரிவிக்கப்பட்டது.

அதற்கு நீதிபதிகள், தற்போது உள்ள நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தினாலும், ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட கோவில்களைப் போன்ற அற்புதமான கட்டுமானம், தொழில்நுட்பம் மற்றும் முறையான ஆகம விதிப்படி கட்ட முடியாது என்று தெரிவித்தனர். எனவே பழமையான கோவில்களை முறையாக பராமரித்து சிறப்பாக பாதுகாக்க வேண்டும் என அறிவுறுத்தினர். மனுதாரரின் புகார்கள் குறித்து புகைப்படங்கள் மற்றும் ஆவணங்களை தாக்கல் செய்ய உத்தரவிட்டு விசாரணையை 2 வாரங்களுக்கு ஒத்திவைத்தனர்.




| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,805 | Rs.5,204 |

# சாதனை படைத்த இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் வீராங்கனை



புதுடெல்லி மார்.20–

இந்தியமகளிர்கிரிக்கெட் அணியின் வீராங்கனை ஜுலன் கோஸ்வாமி, தன்னுடைய200ஆவது ஒருநாள் போட்டியில் விளையாடிவருகிறார்.

பெண்கள் உலகக் கோப்பை கிரிக்கெட் தொடரில் 18–வது லீக் ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணியை, இந்தியா எதிர்கொள்கிறது. இந்த ஆட்டத்தில் டாஸ் வென்ற ஆஸ்திரேலியா, இந்தியாவிற்கு எதிராக பந்துவீச்சை தேர்வு செய்தது. இதையடுத்து முதலில் பேட்டிங் செய்த இந்திய அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் இழப்பிற்கு 277 ரன்கள் சேர்த்தது. இதனைத் தொடர்ந்து 278 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆஸ்திரேலியா அணி ஆடிவருகிறது.

இந்த போட்டி இந்திய அணியின் பந்துவீச்சாளர் ஜுலன் கோஸ்வாமிக்கு 200ஆவது ஒருநாள் போட்டி ஆகும். இதன்மூலம் கேப்டன் மிதாலி ராஜ்க்கு அடுத்தபடியாக 200 ஒருநாள் போட்டிகளை எட்டிய இரண்டாவது மகளிர் அணி வீராங்கனை என்ற பெருமையை பெற்றுள்ளார் 39 வயதான ஜுலன் கோஸ்வாமி.

# சீனாவில் கடந்த ஓராண்டுக்கு பின் பதிவான முதல் கொரோனா உயிரிழப்பு



சீனா மார்.20–

சீனாவின் வூகான் நகரில் 2019 ஆம் ஆண்டு கொரோனா வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. தற்போது கொரோனா வைரஸ் 221 நாடுகள் பிரதேசங்களுக்கு பரவி பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது.கொரோனாவை கட்டுப்படுத்த தடுப்பூசி செலுத்தும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வரும் நிலையிலும் வைரஸ் உருமாற்றம் அடைந்து பாதிப்பு அதிகரித்து வருகிறது. இதற்கிடையில், சீனாவில் இதுவரை 1 லட்சத்து 28 ஆயிரத்து 462 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித் துள்ளது. அந்நாட்டில் கடந்த பல மாதங்களாக கொரோனாவால் உயிரிழப்பு ஏற்படவில்லை. கடைசியாக, கடந்த ஆண்டு ஜனவரி மாதம் (2021 ஜனவரி) கொரோனா உயிரிழப்பு ஏற்பட்டது. அதன்பின்னர் கொரோனாவால் யாரும் உயிரிழக்கவில்லை என அந்நாட்டு அரசு தெரிவித்தது.

இந்நிலையில், ஓராண்டுக்கு பின்னர் சீனாவில் கொரோனா தாக்குதலுக்கு உயிரிழப்பு பதிவாகியுள்ளது. அந்நாட்டில் கொரோனா தாக்குதலுக்கு 2 பேர் உயிரிழந்துள்ளனர். இந்த 2 உயிரிழப்பும் ஜிலின் மாகாணத்தில் பதிவானதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

சீனாவில் கடந்த சில நாட்களாக கொரோனா பாதிப்பு அதிகரித்து வருகிறது. இதனால், அந்நாட்டின் பல்வேறு நகரங்களில் முழு ஊரடங்கு அமல்படுத்த ப்பட்டுள்ளது. தற்போது ஓராண்டுக்கு பின்னர் கொரோனா உயிரிழப்புகள் பதிவாகியுள்ளதால் கட்டுப்பாடுகளை மேலும் அதிகரிக்க சீன அரசு முடிவு செய்துள்ளது. சீனாவில் ஒரே நாளில் 2 ஆயிரத்து 228 பேருக்கு கொரோனா பாதிப்பு உறுதி செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் அந்நாட்டில் கொரோனா பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1 லட்சத்து 28 ஆயிரத்து 462 ஆக அதிகரித்துள்ளது.மேலும், ஓராண்டுக்கு பின் பதிவான 2 உயிரிழப்புகளை சேர்த்து சீனாவில் கொரோனா பாதிப்பால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 ஆயிரத்து 638 ஆக அதிகரித்துள்ளது.

# அறந்தாங்கி நரிக்குறவர் காலனியில் ரேசன்கார்டுகளை ஆர்டிஒ வழங்கினார்



அறந்தாங்கி,மார்.20:

புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கி கூத்தாடிவயல் நரிக்குறவர் காலனியில் பயனாளிகளுக்கு ரேசன் கார்டினை கோட்டாச்சியர் சொர்னராஜ் வழங்கினார்.

தமிழகமுதலமைச்சரின் சிறப்புசெயலாக்கத்தின் படி நரிக்குறவர், பழங்குடியினர் மற்றும்சமூகத்தின் விளிம்பு நிலையில்உள்ளவர்களுக்கு குறைதீர்க்கும் முகாம் அறந்தாங்கி தாலுகா கூத்தாடிவயல் கிராமத்தில் நடைபெற்ற போது பெறப்பட்ட மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அதனடிப்படையில் பரிந்துரை செய்து அனுப்ப ப்பட்ட பத்து குடும்ப ங்களுக்கு அறந்தாங்கி கோட்டாச்சியர் சொர்னராஜ் தலைமையில் குடிமைப்பொருள் வழங்கள் துறை

தனி தாசில்தார் கருப்பையா முன்னிலையில் ஸ்மார்ட்ரேசன் அட்டைகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் கிராம நிர்வாக அதிகாரி தண்டாயுதபானி, வருவாய் ஆய்வாளர் செந்தில்குமார், குடிமைப்பொருள் தனி வருவாய் ஆய்வாளர் ஆசைத்தம்பி உட்பட பலர் கலந்து கொண்டனர்.



தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டை ஆர்.வி. எஸ் வேளாண்மை கல்லூரியில் இளங்கலை நான்காம் ஆண்டு பயிலும் மாணவிகள் பிரித்திகா, ராஜ அபிநயா, ராஜ கமலினி, ரம்பிகா நாச்சியார், ரமினேனி பாக்கிய சரளா, ரசிகா, சாய் சங்கவி, சங்கீதா, சசிரேகா, சாந்தினி உள்ளிட்டோர் பேராசிரியர் குணா தலைமையில் ஊரக அனுபவ பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர். அதன் ஒரு பகுதியாக தஞ்சாவூர் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் உள்ள மாவட்ட ஊரக வளர்ச்சித் துறையின் அலுவலகத்தை பார்வையிட்டு அங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து கூடுதல் ஆட்சியர் ஸ்ரீகாந்த், யூனியன் அதிகாரி சந்திரபோஸ் மற்றும் அலுவலர்களிடம் இருந்து அத்துறையின் பணிகள் குறித்தும் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்கள் குறித்தும் கேட்டறிந்தனர். அதேபோல் கிராமங்களுக்குச் சென்று பொதுமக்கள் சந்தித்து களப் பணியில் ஈடுபட்டனர்.

### பொன் மாணிக்கவேல் தாக்கல் செய்த

# நீதிமன்ற அவமதிப்பு வழக்கு 2 வாரங்களுக்கு தள்ளிவைப்பு



சென்னை மார்.20–

சிலைக்கடத்தல் தடுப்புப் பிரிவுக்கு போதிய வசதிகள் செய்து கொடுக்கவில்லை என 2018 ல் முன்னாள் சிறப்பு அதிகாரி பொன் மாணிக்கவேல் தாக்கல் செய்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கு, இரு வாரங்களுக்கு தள்ளிவைக்கப் பட்டுள்ளது.

சிலை கடத்தல் தொடர்பான வழக்குகளை விசாரிக்கும் வகையில் 2017ஆம் ஆண்டு ஜூலையில்சிலைகடத்தல் தடுப்பு பிரிவு ஐ.ஜி.-யாக பொன் மாணிக்கவேலை நியமித்து, அவருக்கு தேவையான காவலர்கள், உட்கட்டமைப்பு, வாகன வசதிகளை ஏற்படுத்தி கொடுக்க தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. பின்னர், 2018 நவம்பர் 30ம் தேதி பொன் மாணிக்கவேல் ஓய்வு பெற்றதை அடுத்து, அவர் சிறப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில், சிலை கடத்தல் தடுப்பு பிரிவுக்கு தேவையான வசதிகளை கடந்த இரண்டு ஆண்டுகளாக தமிழக அரசு செய்து கொடுக்கவில்லை எனக் கூறி, அப்போதைய தலைமை செயலாளர் கிரிஜா வைத்தியநாதன், உள்துறை செயலாளர் நிரஞ்சன் மார்டி, டிஜிபி ராஜேந்திரன், சிலை கடத்தல் தடுப்பு பிரிவு கூடுதல் டிஜிபி அபய் குமார் சிங் ஆகியோருக்கு எதிராக, பொன்மாணிக்கவேல் 2018 ஜூன் மாதம் நீதிமன்ற அவமதிப்பு வழக்கை தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் மகாதேவன் மற்றும் ஆதிகேசவலு அமர்வில் விசாரணைக்கு வந்த போது, தமிழக அரசு தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், இந்த வழக்கு குறித்து பதிலளிக்க அவகாசம் வழங்கக் கோரினார். அப்போது நீதிபதிகள் 2 ஆண்டுகளாக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, இதுவரை அவமதிப்பாளர்கள் பதிலளிக்கவில்லை என அதிருப்தி தெரிவித்தனர்.

இதையடுத்து, வழக்கை இரண்டு வாரங்களுக்கு தள்ளி வைத்த நீதிபதிகள், நீதிமன்ற அவமதிப்பு குறித்து விளக்கம் அளிக்க சம்பந்தப்பட்டவர்களுக்கு உத்தரவிட்டதுடன், தவறினால் நேரில் ஆஜராகி விளக்கம் அளிக்க உத்தரவிடப்படும் என எச்சரித்துள்ளனர்.

# ஹிஜாபுக்கு தடை விதித்த கர்நாடக உயர்நீதிமன்ற தீர்ப்பை கண்டித்து கோட்டைப்பட்டிணத்தில் ஆர்ப்பாட்டம்



**மணமேல்குடி, மார்.20:**

புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடியை அடுத்த கோட்டைப்பட்டிணத்தில் ஹிஜாபுக்கு தடை விதித்த கர்நாடக உயர்நீதிமன்ற தீர்ப்பை கண்டித்து ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஹிஜாபுக்கு தடை விதித்த கர்நாடக உயர்நீதிமன்ற தீர்ப்பை கண்டித்து கோட்டைப்பட்டினம் அனைத்து இஸ்லாமிய கட்சிகள் மற்றும் ஜமாஅத் கூட்டமைப்பு நடத்திய கண்டன ஆர்ப்பாட்டம் ஜமாத் நிர்வாகிகள் முன்னிலையில் முகமது சாலிகு ஒருங்கிணைக்க பள்ளிவாசலில் துவங்கி செக்போஸ்ட் வாரை பேரணி சென்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மனிதநேய ஜனநாயக கட்சி மாவட்ட செயலாளர் முபாரக் அலி, தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகம் மாநில பேச்சாளர் திருச்சி சரீப், எஸ்டிபிஐ கட்சி மாநில பொதுச்செயலாளர் உமர் பாரூக் ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள். டிஎன்டிஜே நிஜாம் கான், எஸ்டிபிஐ அப்துல் காசிம், தமுமுக அபு சாலிஹ், மஜக முஹம்மது ஹாரிஸ், முஸ்லிம் லீக் ஜெகபர் சாதிக் ஆகியோர் கண்டன கோஷங்களை முன்மொழிந்தனர்.

அனைத்து இஸ்லாமிய அமைப்புகளின் நிர்வாகிகள் உட்பட ஆண்கள் பெண்கள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் திரளாகக் கூடி ஒன்றிய பாஜக அரசுக்கும் ஹிஜாபுக்கு தடை விதித்து தீர்ப்பு வழங்கிய கர்நாடக உயர் நீதிமன்றக்கும் எதிராக கண்டன கோஷங்களை எழுப்பினர். இறுதியாக கோட்டைப்பட்டிணம் ஜமாத் செயலாளர் சரிப் அப்துல்லா நன்றி உரையாற்றினார்.






# தேசிய இயற்கை அறிவியல் கருத்தரங்கு




புதுக்கோட்டை, மார்.20–

புதுக்கோட்டை தமிழ்நாடு அறிவியல் ஆராய்ச்சிக் கழக நிறுவன உதவியுடன் போஸ் அறிவியல் கழகம் மற்றும் புஷ்கரம் வேளாண் அறிவியல் கல்லூரி இணைந்து 11– வது தேசிய இயற்கை அறிவியல் கருத்தரங்கு மற்றும் விருது வழங்கும் விழா புஷ்கரம் கல்லூரி கூட்ட அரங்கில் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு கல்லூரிச் செயலாளர் ராஜாராம் தலைமை தாங்கினார்; விருத்தாச்சலம் மண்டல வேளாண் ஆராய்ச்சி மைய பேராசிரியர் எம். பாண்டியன் சிறப்புரையாற்றினார். சென்னை வைஷ்ணவ கல்லூரி கணித பேராசிரியர் ஆர். சிவராமன், அழகப்பா பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர் எம். பிருந்தா, துபாய் ஆகாஷ் பிளாண்டேஷன் முதன்மை விஞ்ஞானி சி.ரவீந்திர சிங், ரோலண்ட் பவுண்டேஷன் இயக்குநர் கோமதி சங்கர், சென்னை பல்கலைக்கழக உதவிப் பேராசிரியர் யாமினி சுதாலட்சுமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

தஞ்சாவூர் தேசிய உணவு தொழில்நுட்ப சுய தொழில் மேம்பாட்டு இயக்குநர் டாக்டர் சி. அனந்த ராம கிருஷ்ணன் கருத்தரங்கை துவக்கி வைத்து உரையாற்றும்போது "தற்போது இந்தியா மேலை நாடுகளுக்கு இணையான அறிவியல் தொழில்நுட்ப வளத்தினைப் பெற்றுள்ளது. அதிக மக்கள் தொகை கொண்ட நமது நாட்டில் உணவுக்கான திட்டங்கள் பலவும் மத்திய, மாநில அரசுகளால் மிகச்சிறப்பாக நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன. அதிக சத்துக்கள் நிறைந்த சிறுதானியங்களால் தயார் செய்யப்படும் உணவுகளே நமது குழந்தைகளுக்கு தற்போது தேவை; ஆனால் சிறு தானியங்களை விட சத்துக்கள் குறைந்த வேறு நாடுகளில் விளையக்கூடிய ஓட்ஸ் வகை உணவுகளுக்கே நாம் முக்கியத்துவம் கொடுக்கின்றோம்.

நமது நாட்டில் பெண்களும் குழந்தைகளும் இரும்புச்சத்து குறைபாடு நோய்க்கு ஆளாகின்றார்கள். இந்த சதவிகிதத்தினைக் குறைக்க விவசாயிகள் சிறுதானிய பயிர்களை அதிக அளவில் விளைவிக்க முன்வர வேண்டும். கடந்த ஐந்து ஆண்டுகளில் உணவகங்கள் மற்றும் உணவு தயாரிப்பு நிறுவனங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது; இவர்கள் மூலம் சத்தான உணவு பொது மக்களுக்கு வழங்கப்பட வேண்டும்; மற்ற மாவட்டங்களை ஒப்பிடும்பொழுது புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள குழந்தைகள் சத்துக்கள் குறைந்த உணவையே பயன்படுத்துவதாக ஆய்வுகள் கூறுகின்றன. இதனை மாற்ற தமிழ்நாடு அரசுடன் இணைந்து நிறைவான சத்துணவு திட்டம் தேசிய உணவு தொழில்நுட்ப நிறுவனம் மூலம் நடைமுறைப்படுத்தபட உள்ளது; நமது நாடு உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெற விவசாய மாணவர்கள் அறிவியல் ரீதியான ஆய்வு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்; மேலும் மற்ற நாடுகளுக்கு நாம் உணவை ஏற்றுமதி செய்யும் முதன்மை நாடாக மாற வேண்டும்" என்று கூறினார். டாக்டர் சி.அனந்தராமகிருஷ்ணன் மற்றும் அண்ணாமலைப் பல்கலைக்கழக பேராசிரியர் எம்.பிரகாஷ் ஆகியோரின் அறிவியல் சேவைகளைப் பாராட்டி தமிழ்நாடு அறிவியல் ஆராய்ச்சி நிறுவனத்தால் "தேசிய விஞ்ஞானி விருது 2022" வழங்கி கௌரவிக்கப்பட்டது.

நிகழ்ச்சி நிறைவு விழாவில் அண்ணாமலைப் பல்கலைக்கழக தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர் எம். பிரகாஷ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு விழா நிறைவுரையாற்றினார். அறிவியல் ஆய்வில் சிறந்து விளங்கிய விஞ்ஞானிகளைப் பாராட்டி போஸ்அறிவியல் கழகம் சார்பில் விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டன. முன்னதாக புஷ்கரம் வேளாண் அறிவியல் கல்லூரி முதல்வர் டாக்டர் வி.செல்லமுத்து வரவேற்புரையாற்றினார்.

போஸ் அறிவியல் கழக இயக்குநர் எஸ். விஜிக்குமார் திட்ட முகவுரை ஆற்றினார். செயலர் பேராசிரியர் இராமநாதன் நன்றி கூறினார். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை போஸ் அறிவியல் கழகத்துடன் இணைந்து புஷ்கரம் வேளாண் அறிவியல் கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் செய்திருந்தனர்.

# சபரிமலை ஐயப்பன் கோவிலில் முன்பதிவு செய்த பக்தர்களுக்கு மட்டும் தரிசனத்திற்கு அனுமதி



கேரளா மாச்.20–

புகழ்பெற்ற சபரிமலை ஐயப்பன் கோவிலில் பக்தர்களின் சரண கோஷம் முழங்க பம்பை நதியில் ஆராட்டு திருவிழா நடைபெற்றது.

கேரள மாநிலத்தில் அமைந்துள்ள சபரிமலை ஐயப்பன் கோவிலில் பங்குனி மாத வழிபாட்டுக்காக கடந்த எட்டாம் தேதி நடை திறக்கப்பட்டு, ஒன்பதாம் தேதி கொடியேற்றத்துடன் ஆராட்டு திருவிழா தொடங்கியது.

ஆராட்டு விழாவிற்காக மேளதாளம் முழங்க ஐயப்பனின் விக்ரகம் ஊர்வலமாக பம்பை நதிக்கு எடுத்து வரப்பட்டது. அங்கு அமைக்கப்பட்டிருந்த விழா மேடையில் சிறப்பு பூஜைகள் நடத்தப்பட்டு பம்பை நதியில் ஆராட்டு விழா நடந்தது. இதைத் தொடர்ந்து ஆராட்டுவிழா கொடி இறக்கப்பட்டது, இந்த ஆராட்டு விழா நிகழ்வினைக் காண ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்து சாமி தரிசனம் செய்து வழிபட்டனர்.

இந்த சூழலில் சபரிமலை கோவிலில் சாமி தரிசனம் செய்ய முன்பதிவு செய்துள்ள பக்தர்களுக்கு தரிசனத்துக்கு அனுமதி வழங்கப்படும் என திருவிதாங்கூர் தேவசம் போர்டு அறிவித்துள்ளது. இதனைத் தொடர்ந்து சபரிமலை கோவிலில் அய்யப்பனுக்கு ஹரிவராசனம் பாடி நடை அடைக்கப்பட உள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### கறம்பக்குடி அருகே

# சொத்து பிரச்சனையில் தம்பியை அரிவாளால் வெட்டிய அண்ணன் கைது



**புதுக்கோட்டை மச்.20–**

கறம்பக்குடி அருகே சொத்து பிரச்சனையில் தம்பியை அரிவாளால் வெட்டிய அண்ணனை காவல்துறையினர் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜா படுத்தினர்.

புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி அருகே வெட்டன் விடுதி வடக்கு தெருவை சேர்ந்தவர் கணேசன். இவரது மகன்கள் இயலரசன் (52), கலைச்செல்வம்(45) ஆகிய இருவருக்கும் இடையே ஏற்பட்ட சொத்துப் பிரச்சனையில் இயலரசன் தனது சகோதரரான கலைச்செல்வம் மீது தாக்குதல் நடத்தி அரிவாளால் வெட்டியுள்ளார்.

இதில் இடதுகழுத்தில் பலத்த காயமடைந்த கலைச்செல்வம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார். சம்பவம் குறித்து கலைச்செல்வம் அளித்த புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்த மழையூர் காவல் உதவி ஆய்வாளர் ராஜு அரிவாளால் வெட்டிய இயலரசனை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜா படுத்தினர்.

Owned & Published by **S.Sivasakthivel**, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: **K.selvaraj** Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: **S.Sivasakthivel**. Phone:04322-261577.
**Chennai Office: Chief Reporter S.Kadar Hussain,** ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com

# நாகை மாவட்டம் திருமருகல் ஊராட்சி சேகல் கிராமத்தில் குவாரி அமைக்க பொதுமக்கள் எதிர்ப்பு



நாகப்பட்டினம், மார்ச்.20-

நாகை மாவட்டம் திருமருகல் ஊராட்சிக்குட்பட்ட சேகல் கிராமத்தில் 300 ஏக்கர் பரப்பளவில் விவசாயம் நடைபெற்று வருகிறது, விவசாயம் நிறைந்த இப்பகுதியில் தோப்புதிடல் என்ற இடத்தில் 2- ஏக்கர் பரப்பளவில் குவாரி அமைத்து அதிலிருந்து எடுக்கப்படும் மண் நாகப்பட்டினம் - விழுப்புரம் தேசிய நெடுஞ்சாலைக்கு பயன்படுத்தப்பட உள்ளது. இந்த பகுதியில் மண் எடுப்பதற்கு அப்பகுதி பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் அப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் மாவட்ட ஆட்சியர் அருண் தம்புராஜ்யிடம் இப்பகுதியில் குவாரி அமைக்க கூடாது என வலியுறுத்தி உள்ளனர். தமிழக முதல்வருக்கு தபால் மூலமும் தங்களுடைய எதிர்ப்பை பதிவு செய்துள்ளனர். இந்நிலையில் நேற்று 100-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டு குவாரி அமைக்கப்பட உள்ள இடத்தில் கூடி நின்று மாவட்ட நிர்வாகம் குவாரி அமைக்க அனுமதி அளித்ததை ரத்து செய்ய வேண்டும், அனுமதி அளித்தால் விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் எனவும் கால்நடைகளுக்கு உயிர்சேதம் ஏற்படும் எனவும் கூறி தங்களுடைய எதிர்ப்புகளை பதிவு செய்தனர்.

இந்த எதிர்ப்புப் போராட்டத்தில் ஊராட்சி மன்றத்தலைவர் கண்ணன், . கிராம தலைவர் குப்புசாமி, துணைத் தலைவர் தம்புராசு, செயலாளர் பாலசந்திரன், மற்றும் நிர்வாகிகள் ஆனஸ்ட்ராஜ், மாரியப்பன், ராஜா உள்ளிட்ட நிர்வாகிகளும் கலந்து கொண்டு தங்களது எதிர்ப்பை தெரிவித்தனர்.

# குத்தாலம் அருகே மாசடைந்த குடிநீரால் 10 பேருக்கு வாந்தி மயக்கம்



குத்தாலம், மார்ச்.20:

மயிலாடுதுறை மாவட்டம்,குத்தாலம் தாலுக்கா சேத்திரபாலபுரம் ஓஎன்ஜிசி எரிவாயு மற்றும் எண்ணெய் சேகரிப்புத் மையத்தின் எதிரே உள்ள ராமாமிருதம் தெருவில் 150-க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இவர்களுக்கு அப்பகுதியில் உள்ள மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் இருந்து குடிநீர் வினியோகம் செய்யப்படுகிறது.

கடந்த இரு நாட்களுக்கு முன்பு அந்த நீரை உட்கொண்ட முத்தமிழ்செல்வன்.32, இளந்தமிழ்.25, லோகேஷ்.6, சிவானி.2, உள்ளிட்ட 10க்கும் மேற்பட்டோர் வாந்தி தலைசுற்றல் மயக்கம் ஆகிய பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர்.

இவர்கள் அனைவரும் குத்தாலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளனர். இதில் மிகவும் பாதிக்கப்பட்ட சிறுவன் லோகேஷ் மேல் சிகிச்சைக்காக மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இதுகுறித்த நேற்று தகவல் அறிந்த குத்தாலம் தாசில்தார் பிரான்சுவா, இன்ஸ்பெக்டர் வள்ளி வட்டார வளர்ச்சி அலுவலர் கஜேந்திரன் ஆணையர் சுமதி உள்ளிட்ட அதிகாரிகள் சம்பவ இடத்தை பார்வையிட்டு ஆய்வு செய்ததுடன், குத்தாலம் அரசு மருத்துவமனைக்குச் சென்று நிலைமை குறித்து கேட்டறிந்தனர்.

பின்னர் அவர்கள் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் இருந்து வழங்கப்பட்ட மாசடைந்த குடிநீரில் ஓஎன்ஜிசி மாசு அடைந்து எண்ணெய் படலம் தண்ணீரில் வந்துள்ளதாகவும், அதனாலேயே இந்த பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது. தொடர்ந்து மண் மற்றும் நீர் பரிசோதனை செய்த பின்னர் உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தனர். இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# மூதாட்டி வீட்டு வாசலில் சிறுநீர் கழித்த விவகாரத்தில் டாக்டர் சுப்பையா கைது





சென்னை , மார்.20-

இரண்டுஆண்டுகளாக நிலுவையில் இருந்த வழக்கில், தற்போது சுப்பையாசண்முகம்கைது செய்யப்பட்டுள்ளார்.

சென்னையில் மூதாட்டி வீட்டு வாசலில் சிறுநீர் கழித்தது தொடர்பான வழக்கில் ஏபிவிபி அமைப்பின் முன்னாள் தேசிய தலைவர் டாக்டர் சுப்பையா கைது செய்யப்பட்டுள்ளார்.

கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையின் மருத்துவராகபணிபுரிந்து வந்த இவர், புற்றுநோய் அறுவை சிகிச்சை பிரிவு தலைவராகவும் இருந்துள்ளார். சென்னை நங்கநல்லூரில் 2020 ஜூலை மாதம், அடுக்குமாடி குடியிருப்பில் பார்க்கிங் பிரச்னை காரணமாக, தனது எதிர் வீட்டில் தனியாக இருந்த மூதாட்டியின் வாசல் முன்பு சுப்பையா சண்முகம் சிறுநீர் கழித்ததாக புகார் அளிக்கப்பட்டது.

அத்துடன், பயன்படுத்திய முகக் கவசங்களை வீசிய வீடியோவும்வெளியானது. இதையடுத்து, அவர் மீது பெண்கள் வன்கொடுமை தடுப்புச் சட்டம், ஆபாசமாக பேசுதல் உட்பட 3 பிரிவுகளின் கீழ் ஆதம்பாக்கம் போலீசார் வழக்கு பதிவு செய்தனர். இரண்டு ஆண்டுகளாக நிலுவையில் இருந்த வழக்கில், தற்போது சுப்பையாசண்முகம்கைது செய்யப்பட்டுள்ளார்.

அண்மையில், தேனாம்பேட்டை சித்தரஞ்சன் சாலையில் உள்ள தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டாலின் வீட்டின் முன்பு ஏபிவிபி அமைப்பைச் சேர்ந்தவர்கள் முற்றுகை போராட்டத்தில் ஈடுபட்டனர். இதற்கு, சுப்பையா தூண்டுதலாக இருந்ததாக கூறி, மருத்துவர் பணியில் இருந்து பணியிடை நீக்கம் செய்து, அவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# மயிலாடுதுறையில் 500க்கும் மேற்பட்ட சாரண சாரணிய மாணவிகள் பங்கேற்ற சுற்றுச்சூழல் விழிப்புணர்வு பேரணி



மயிலாடுதுறை , மார்ச்.20:

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறையில் மாவட்ட அளவிலான சாரண, சாரணியர்களுக்கான 3நாள் பயிற்சி முகாம் நகராட்சி மேல்நிலைப்பள்ளியில் துவங்கியது. இதில் மாவட்டம் முழுவதும் 60 பள்ளிகளில் இருந்து, 540 மாணவ, மாணவிகள் பங்கேற்றுள்ளனர்.

துவக்க நாளான நேற்று, உலக சமாதானம் வேண்டியும், சுற்றுச்சூழல் பாதுகாப்பை வலியுறுத்தியும், சாரண, சாரணீய மாணவ, மாணவிகளின் பேரணி நடைபெற்றது. நகராட்சி மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் துவங்கிய பேரணி முக்கிய வீதிகள் வழியே, மீண்டும் பள்ளியை வந்தடைந்தது. இதில் பங்கேற்ற சாரண, சாரணீயர், பிளாஸ்டிக்விழிப்புணர்வு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மழைநீர் சேகரிப்பு இவற்றை வலியுறுத்தி கோஷங்களை எழுப்பி சென்றனர்

# திருமருகல் அருகே ஆபத்தான நிலையில் உள்ள மின்கம்பம் மாற்றியமைக்கப்படுமா? பொதுமக்கள் எதிர்பார்ப்பு



நாகப்பட்டினம், மார்.20-

திருமருகல் அருகே ஆபத்தான நிலையில் உள்ள மின்கம்பம் மாற்றியமைக்கப்படுமா? என பொதுமக்கள் எதிர்பார்த்துள்ளனர். ஆபத்தான மின்கம்பம் நாகை மாவட்டம் திருமருகல் ஒன்றியம் இடையாத்தாங்குடி ஊராட்சி கிடாமங்கலம் கிராமம் உள்ளது. இந்த பகுதியில் 100-க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் வசித்து வருகின்றனர். இப்பகுதி மக்கள் அனைவரும் விவசாயத்தை நம்பி உள்ளனர்.

கிடாமங்கலம் பகுதியில் இருந்து மின்கம்பங்கள் மூலம் பல்வேறு பகுதிகளுக்கு மின் வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த நிலையில் கிடாமங்கலம் எம்ஜிஆர் நகரில் குடிசைப் பகுதிகளுக்கு நடுவில் அமைக்கப்பட்டுள்ளது. மின்கம்பங்களில் இருந்து செல்லும் உயர் மின் அழுத்தகம்பிகள் தாழ்வாக குடிசை வீடுகளை உரசி செல்கிறது. இதனால் வேகமாக காற்று வீசும் நேரங்களில் மின்கம்பிகள் ஒன்றோடு ஒன்று உரசி தீப்பொறிகள் பறந்து குடிசை வீடுகளில் விழுகிறது.

இதனால் அடிக்கடி குடிசைகள் தீப்பற்றி எரிகிறது. எந்த நேரத்திலும் பெரும் அளவில் தீப்பற்றி விபத்துக்கள் ஏற்படும் என்ற அச்சத்துடனே அப்பகுதி பொதுமக்கள் உள்ளதாக கூறுகின்றனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பலமுறை புகார் அளித்தும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனவும், மின் கம்பத்தை மாற்றி அமைக்க ரூ.30 ஆயிரம் வரை தொகை செலுத்த வேண்டும் எனவும் மின்வாரிய துறை அதிகாரிகள் தெரிவித்ததாகவும் அப்பகுதி தெரிவிக்கின்றனர். எனவே ஆபத்தை உணர்ந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கைமேற்கொண்டு ஆபத்தான மின்கம்பத்தை மாற்றியமைத்து தர வேண்டி பொது மக்கள் கோரிக்கை வைத்து காத்துள்ளனர்.

# ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரரை மணந்த இந்திய வம்சாவளி பெண்



கன்பரா, மார்.20-

ஆஸ்திரேலியகிரிக்கெட் அணியின் வீரர் கிளென் மேக்ஸ்வெல், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த வினி ராமனை திருமணம் செய்து கொண்டார்.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணியைச் சேர்ந்த ஆல்ரவுண்டர் கிளென் மேக்ஸ்வெல். 2015-ல் உலகக் கோப்பையை வென்ற ஆஸ்திரேலிய அணியில் இடம்பிடித்தவர் ஆவார். இதனிடையே மனரீதியாக சில பிரச்சனைகள் இருப்பதால், சில காலம் கிரிக்கெட்டிலிருந்து ஒதுங்கியிருக்க விரும்புவதாகக் கூறி சில மாதங்கள் பிரேக்கில் இருந்தார். பின்னர் மீண்டும் அணிக்கு திரும்பினார். மேலும் ஆர்சிபி அணிக்காக கடந்தாண்டு ஐ.பி.எல்.லில் ஆடிய மேக்ஸ்வெல்லை அந்த அணியே மீண்டும் தக்கவைத்தது.

இந்நிலையில், கடந்த 2020 பிப்ரவரியில் மேக்ஸ்வெல்லுக்கும் இந்திய வம்சாவளியைச் சேர்ந்த ஆஸ்திரேலிய பெண்ணான வினி ராமனுக்கும் இந்திய பாரம்பரிய முறைப்படி திருமண நிச்சயதார்த்தம் நடைபெற்றது. இதனைத்தொடர்ந்து, வினி ராமன் -மேக்ஸ்வெல் ஜோடிக்கு திருமணம் நடந்துள்ளது. இது தொடர்பாக மேக்ஸ்வெல் புகைப்படம் ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த பதிவில், காதல் என்பது நிறைவுக்கான தேடல். இப்போது எனக்கு நிறைவடைந்துள்ளது என பதிவிட்டுள்ளார்.

அதே போல வினி ராமனும் கணவர் மேக்ஸ்வெல்லுடன் இருக்கும் புகைப்படத்தை வெளியிட்டுள்ளார். சமூக வலைதளங்களில் வைரலாகி உள்ள நிலையில் தம்பதிக்கு பலரும் வாழ்த்து தெரிவித்துள்ளனர். இவர்கள் இருவரும் கடந்த 4 ஆண்டுகளாக காதலித்து வந்துள்ளதாக கூறப்படுகிறது.

மேக்ஸ்வெல் திருமணம் செய்து கொண்ட வினி ராமனின் பெற்றோர் தென் இந்தியாவைச் சேர்ந்தவர்கள். ஆனால் வினி ராமன் பிறந்து வளர்ந்து, படித்தது எல்லாம் ஆஸ்திரேலியாவில் தான். அவர் மெல்போர்னில் மருந்தக பிரிவில் படிப்பை முடித்து உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# விக்னேஷ் சிவன் இயக்கத்தில் லைக்கா தயாரிப்பில் அஜித்தின் அடுத்த படம்



சென்னை மச்.20-

நடிகர் அஜித்தின் 62-வது திரைப்படத்தை விக்னேஷ் சிவன் இயக்க உள்ளதாக தகவல் வெளியான நிலையில், அதனை அஜித்தின் மேலாளர் சுரேஷ் சந்திரா உறுதி செய்து அறிக்கை வெளியிட்டுள்ளார்.

'நேர்கொண்ட பார்வை' படத்திற்குப் பிறகு, இயக்குநர் ஹெச் வினோத் - நடிகர் அஜித் - தயாரிப்பாளர் போனி கபூர் ஆகியோர், 2-வது முறையாக கூட்டணி அமைத்து உருவான படம் 'வலிமை'. நடிகர் அஜித்தின் 60-வது திரைப்படமாக உருவான இந்தப் படம், நீண்ட இடைவெளி மற்றும் காத்திருப்புக்குப் பின், கடந்த 24-ம் தேதி திரையரங்குகளில் வெளியானது.

படம் வெளியானது முதல் கலவையான விமர்சனங்களை பெற்று வந்த நிலையில், 3-வது முறையாகஇந்தகூட்டணி இணைந்து, புதிய படத்தை அறிவித்தது. நடிகர் அஜித்தின் 61-வது படமான இந்தப்படத்தின் பூஜை நிகழ்ச்சி கடந்த 9-ம் தேதி நடந்ததாகவும், வரும் மார்ச் 19-ம் தேதி முதல் ஹைதராபாத்தில் படப்பிடிப்பு தொடங்க உள்ளதாகவும் கூறப்பட்டது. இதற்காக, பிரம்மாண்ட அரங்கை 'அஜித் 61' படக்குழுவினர் அமைத்துள்ளனர்.

இந்நிலையில், நடிகர் அஜித்தின் 62-வது திரைப்படத்தை விக்னேஷ் சிவன் இயக்க உள்ளதாக தகவல் வெளியான நிலையில், அதனை அஜித்தின் மேலாளர் சுரேஷ் சந்திரா உறுதி செய்துள்ளார். 'அஜித் 62' படத்தை விக்னேஷ் சிவன் இயக்க, அனிருத் இசையமைக்க உள்ளார்.

அஜித்தின் 'வேதாளம்', 'விவேகம்' படத்திற்கு பிறகு அனிருத் இந்தப் படத்தில் இணைந்துள்ளார். இந்தப் படத்தின் படப்பிடிப்புகள் இந்த வருடத்தின் இறுதியில் துவங்கும் என்றும், அடுத்த ஆண்டு இந்தப் படம் வெளியிடப்படும் என்றும் லைகா தெரிவித்துள்ளது. படத்தின் மற்ற நடிகர், நடிகையர் மற்றும் தொழில்நுட்பகுழு குறித்த அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்றும் லைகா கூறியுள்ளது.

'நானும் ரவுடிதான்' படத்திற்குப் பிறகு இயக்குநர் விக்னேஷ் சிவன் விஜய் சேதுபதியை வைத்து 'காத்து வாக்குல இரண்டு காதல்' படத்தை தற்போது இயக்கியுள்ளார். இந்தப் படத்தில் நயன்தாரா, சமந்தா ஆகியோர் கதாநாயகிகளாக நடித்துள்ளனர். இந்தப் படம் வரும் ஏப்ரல் 28-ம் தேதி வெளியாகவுள்ளது. இந்நிலையில், அஜித் படத்தை இயக்க உள்ளதால், விக்னேஷ் சிவனுக்கு, இயக்குநர் நெல்சன் உட்பட பலரும் வாழ்த்துக்கள் தெரிவித்து வருகின்றனர்.

# விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு அமைச்சர் பரிசுகள் வழங்கல்




காரைக்கால் ,மார்.20-

காரைக்கால் மாவட்டத்தில் மாவட்ட அளவிலான தடகல போட்டிகள் கொரோனா தொற்று காரணத்தால் இரண்டு ஆண்டுகள் நடைபெறாத நிலையில் இந்த ஆண்டு போட்டி மூன்றாவது முறையாக காரைக்கால் மாவட்டத்தில் நடத்தப்பட்டு வருகிறது. போட்டியை முதன்மை கல்வி அதிகாரி ராஜசேகரன் கொடியேற்றி, துவக்கிவைத்தார். இப்போட்டிகள் சனிக்கிழமை தொடங்கி இரண்டு நாள் நடைபெறுகிறது. இப்போட்டியில் சுமார் 700 -க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொள்கிறார்கள்.

8பிரிவாகநடைபெறும் போட்டியில் 100 மீட்டர், 200 மீட்டர், 800 மீட்டர் உள்ளிட்ட தடகள விளையாட்டு மற்றும் நீளம் தாண்டுதல், உயரம் தாண்டுதல், குண்டு எறிதல், போன்ற விளையாட்டுகள் இடம் பெறுகின்றன. இதில் வெற்றி பெறுபவர்கள் இந்திய அளவில் நடைபெறும் போட்டியில் கலந்து கொள்வார்கள். இந்நிகழ்ச்சியில் ஓய்வு பெற்ற விரிவுரையாளர் மனோகரன் மற்றும் உடற்பயிற் கல்வி விரிவுரையாளர் வெங்கடேஷ் மற்றும் காரைக்கால் மாவட்ட தட கல சங்க தலைவர் லெனின்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

மேலும் சனிக்கிழமை நடைபெற்ற பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்களுக்கு பாண்டிச்சேரி போக்குவரத்துத்துறை அமைச்சர் சந்திரபிரியங்கா மாணவர்களை பாராட்டியும் ஊக்கப்படுத்தியும் பரிசுகளை வழங்கினார். மேலும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் போட்டிகள் அனைத்திற்கும் மாலை பரிசுகள் வழங்கப்படும் என்று நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர். போட்டிக்கான ஏற்பாடுகளை தடகள சங்கத்தின் செயலாளர் சந்திரமோகன் மற்றும் பெற்றோர் சங்கத்தினர் செய்திருந்தார்கள்.

# தோனி மீது பரஸ்பர மரியாதை வைத்திருப்பதாக கவுதம் கம்பீர் பேச்சு



இந்தியா மார்.20-

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் தொடக்க பேட்ஸ்மேன் கவுதம் கம்பீர் 2003-இல் அணியில் அறிமுகம் ஆனார். முன்னாள் கேப்டன் எம்.எஸ் தோனி 2004இல் அணியில் அறிமுகம்செய்யப்பட்டார். ஆரம்பக்காலத்தில் இருவரும் சக வீரர்களாக இருந்தனர். ஆனால் கம்பீருக்கு பிறகு அறிமுகமான தோனி அணியின்கேப்டன் ஆனார். அவரது கேப்டன்சியின் கீழ் பல ஆண்டுகள் விளையாடி வந்தார் கம்பீர். இதனிடையே கம்பீருக்கும் தோனிக்கும் ஆகாது என்றொரு பொதுவான பார்வை விமர்சகர்களிடையே உள்ளது. அதற்கு காரணம், தோனி, கம்பீரை இந்திய அணியைவிட்டுநீக்கினார் என்ற ஒரு தகவலும், கம்பீர் ஓய்வுக்குப் பின் தொடர்ந்து தோனியை கடுமையாக விமர்சித்து வருவதும் தான்.

இந்நிலையில் தோனி மீது பரஸ்பர மரியாதை வைத்திருப்பதாகவும், தோனிக்கு அடுத்தபடியாக நிற்பவர் அவர்தான் என்றும் கவுதம் கம்பீர் கூறியுள்ளார். இதுகுறித்து கம்பீர் அளித்த பேட்டி ஒன்றில் கூறுகையில், ''கம்பீருக்கு தோனியை பிடிக்கவில்லை என்று கூறுவதெல்லாம் அபத்தம். தோனி மீது எனக்கு பரஸ்பர மரியாதை உண்டு.

அது எப்போதும் நிலைத்திருக்கும். 138 கோடி மக்கள் முன்னிலையில் எங்கு வேண்டுமானாலும் இதை என்னால் சொல்ல முடியும். இது அவருக்கு ஒருபோதும் தேவை இல்லை என்று நான் நம்புகிறேன்.



திண்டுக்கல் மாவட்டம், வடமதுரை முதல்நிலை பேரூராட்சி செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்ட தமிழக அரசின் சாதனை விளக்க புகைப்படக் கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டனர்.



# நரிக்குறவர்களுக்கு அங்கீகாரம் பிரதமருக்கு கோரிக்கை

# சீனாவில் ஒரு வருடத்திற்கு பிறகு கொரோனாவால் உயிரிழப்பு





# மூதாட்டி வீட்டில் சிறுநீர் கழித்த டாக்டர் சுப்பையா கைது


| சென்னை / புதுக்கோட்டை | 20.03.2022 | varalaruu.com | பக்கம்:5 | ரூ.5 |
|---|---|---|---|---|

புதுகை வரலாறு நாளிதழ்

20.03.2022 ஞாயிறு

புதுகை வரலாற்றில் இன்று

# பிறந்த நாள்




## பி. சி. அலெக்சாண்டர்

இந்திய அரசியல்வாதி

புதுகை வரலாறு நாளிதழ்

# நினைவு நாள்



## ராணி அவந்திபாய்

இந்திய விடுதலைப் போராட்ட வீராங்கனை

புதுகை

# வரலாறு

நாளிதழ்

## தமிழ்நாடு முழுவதும் தாலுக்காக்கள் மாவட்டங்கள் வாரியாக செய்தியாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்

கல்வித்தகுதி +2- தமிழில் எழுத்துப் பிழையின்றி எழுத படிக்க தெரிந்திருக்க வேண்டும்

மாதம் ஒன்றுக்கு குறைந்தது ரூ.10 ஆயிரத்திற்கு விளம்பரங்கள் சேகரிக்க வேண்டும்

**விண்ணப்பிக்க வேண்டிய முகவரி**

ஆசிரியர் - புதுகை வரலாறு : நம்பர் 1103,
பெரியார் நகர், ராஜகோபாலபுரம் போஸ்ட், புதுக்கோட்டை-3.
தொடர்புக்கு: 04322 261577

சம்பளம் தங்களின் உழைப்பை பொறுத்து வழங்கப்படும்